Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JUNE 15, 2022

புதன்கிழமை ஜூன் 15, 2022 | ஒளி: 08 கதிர்: 023 | பக்கம்:08 | நகரப்பதிப்பு ★ | Free

## சீனாவின் அரிசி நிவாரணம்

### கொழும்பை 25,30 களில் வந்தடையும்

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில் உணவுத் தட்டுப்பாட்டை தவிர்க்கும் விதமாக, இலங்கைக்கு உதவும் வகையில் சீனா வழங்குமென தெரிவிக்கப்பட்டிருந்த 500 மில்லியன் சீன யுவான் பெறுமதியான அரிசி தொகையில் முதல் மற்றும் இரண்டாம் கட்ட அரிசி தொகை எதிர்வரும் 25, 30 ஆம் திகதிகளில் கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது. இதில் பாடசாலை மாணவர்களுக்கான உணவு திட்டத்தின் கீழ் 10,000 மெட்ரிக் தொன் அரிசி வழங்கப்படும் எனவும் இலங்கையில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது. ஒட்டு மொத்தமாக 6 கட்டங்களாக அரிசியை வழங்கவே சீனா இணக்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அங்கம்பொரை பாதுகாக்க அனுமதி

எமது நாட்டில் காணப்படுகின்ற பாரம்பரிய விளையாட்டாகவும், தற்காப்புக் கலையாகவும், கலாசார மரபுரிமையாகவும் காணப்படுகின்ற 'அங்கம்பொர' (உடற் போர்) தற்காப்புக் கலையை மேம்படுத்துவதற்கு விளையாட்டுகள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. தொடர்ச்சி P2

### எரிபொருள் நெருக்கடி தொடர்ந்தால்

# வெள்ளியே இறுதி பயணம்

**அரசாங்கத்துடன் பிரச்சினைகள் இல்லை; எரிபொருள் நெருக்கடியே பிரச்சினை**

**அரசாங்கம் இந்த நாட்டு மக்களுக்கு உண்மையைக் கூற வேண்டும்**

**மே 9 ஆம் திகதியை விட அதிக வன்முறை விளைவுகளை அரசாங்கம் சந்திக்க நேரிடும்**

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி தொடருமானால் வெள்ளிக்கிழமை (17) தனியார் பஸ் சேவைகள் நிறுத்தப்படும் எனவும் அனைத்து பஸ் உரிமையாளர்களும் சேவையில் இருந்து விலக நேரிடலாம் என்றும் அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

நேற்று (14) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

20% தனியார் பஸ்கள் (4,000) இன்று (15) மற்றும் வியாழன் (16) ஆகிய இரு தினங்களில், நாடு முழுவதும் இயங்கும் எனவும் கையிலுள்ள எரிபொருளைக் கொண்டு பஸ்களின் எண்ணிக்கை 3,000 ஆக மட்டுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்த அவர், வெள்ளியன்று பஸ்களின் சேவையை முன்னெடுன்ன முடியாது என தெரிவித்தார். தொடர்ச்சி P2

## அரச ஊழியருக்கு வெளிநாட்டு விடுமுறை

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, அரச உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் தொழில் புரிவதற்கோ அல்லது வேறு பயனுறுதி வாய்ந்த தொடர்ச்சி P2

அத்தியாவசியம் தவிர்ந்த ஏனைய அரச நிறுவனங்களுக்கு

## 3 மாதங்களுக்கு வெள்ளி பூட்டு

அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய அரச நிறுவனங்களை, எதிர்வரும் 03 மாதங்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் மூடுவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. தொடர்ச்சி P2

ஸ்டாலினுக்கும் ஜெய்சங்கருக்கும்

## மகஜர் கையளிக்க வடக்கு தீர்மானம்

இந்திய இழுவைப்படகுகள் இலங்கை வடக்கு கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைவதை கட்டுப்படுத்தக் கோரி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் மகஜரொன்றை கையளிக்க வடக்கு கடற்றொழிலாளர்கள் தீர்மானித்துள்ளதாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சம்மேளன தலைவர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். தொடர்ச்சி P2

## கடல் அலையில் கால் கழுவிய மூவர் மாயம்

அம்பலாந்தோட்டை, வெலிபட்டன்வில கடற்கரையில், அலையில் கால் நனைக்கச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர், அலையில் சிக்குண்டு காணாமல் போயுள்ளனர் என்று அம்பலாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

பொசன் பூரணை தினமான நேற்று (14) வெலிபட்டன்வில விஹாரக்குச் சென்றதன் பின்னர், நண்பகல் வேளையில் கடற்கரைக்குச் சென்ற போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் 55 வயதுடைய தாய், 16 வயதான அவரது மகன், 22 வயதான பெறாமகன் ஆகியோரே காணமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூவரும், கடல் அலையில் கால் நனைக்கச் சென்ற சந்தர்ப்பத்திலேயே அலையில் அள்ளுண்டு செல்லப்பட்டதாக அலையிலிருந்து தப்பித்த பிள்ளையொன்று பொலிஸாரிடம் தெரிவித்துள்ளது. காணாமல் போன பெண்ணின் தாயாருக்காக அன்னதானம் வழங்கச் சென்றிருந்த குழுவினர், பின்னர் கடற்கரைக்குச் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## "ஜனாதிபதி ஊமையா என எண்ணத் தோன்றுகிறது"

நாட்டு மக்களுடன் மிகவும் குறைவாகக் கலந்துரையாடும் ஒரே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்றே கூற வேண்டும். அவரது செயற்பாடுகளை அவதானிக்கும் போதும் ஒரு சில வேளைகளில் அவர் ஊமையா என்று கூட எண்ணத்தோன்றும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவச தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவை எவ்வளவு விமர்சித்தாலும் அவர் மக்களுடன் நெருக்கமான உறவைக் கையாண்டார் என்பதை மறுக்க முடியாது. மக்களின் பிரச்சினைகள் பலவற்றை மஹிந்த ராஜபக்ஷ விளங்கிக்கொண்டிருந்தார். தொடர்ச்சி P2

## பொருளாதார நெருக்கடிக்கு பின்னால் அரசியல்

**இப்போதும்கூட கொள்ளை அடிக்க சட்டங்களை இயற்றுகின்றனர் இயற்றுகிறார்கள்**

தனி குடும்பத்திடம் நாடு ஒப்படைக்கப்பட்டமையே நாட்டின் தற்போதைய நிலைமைக்கு காரணம் எனத் தெரிவிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பொருளாதார நெருக்கடிக்குப் பின்னால் அரசியல் இருப்பதாகவும் தெரிவித்தார்.

நாடு தற்போது முகம் கொடுத்துவரும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னால் அரசியல் இருக்கிறது. அதுபோல், அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமையும் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் எனவும் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் எவ்வளவு காலத்துக்கு இதுபோல பொறுமையாக இருப்பார்கள்? எவ்வளவு காலத்துக்கு மக்களுக்கு இந்த மனநிலை இருக்கும் என்பதை நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

குடும்பவாத அரசியலே நாடு வீழ்ந்து கிடைப்பதற்கு காரணம். நாடு வீழ்ந்து கிடக்கும் இப்போதும்கூட கொள்ளையடிப்பதற்காக சட்டங்களை இயற்றுகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

## வத்தளையில் துப்பாக்கி சூடு: இளைஞர் பலி

### 14 நாள்களில் அறுவர் பலி

வத்தளை பொலிஸ் பிரிவிக்கு உட்பட்ட எலகந்த -ஹெந்தல வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த நபரொருவர் ராகம போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என, பொலிஸார் தெரிவித்தனர். திங்கட்கிழமை (06) திகதி மட்டக்குளியில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 23 வயதான ஒருவர் உயிரிழந்திருந்ததுடன், ஜூன் மாதத்தில் நேற்று (14) வரை நாட்டில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் அறுவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று (14) மதியம் நடத்தப்பட்ட குறித்த துப்பாக்கிச் சூட்டில் வத்தளை பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞரொருவரே உயிரிழந்துள்ளார். தொடர்ச்சி P2

## ஹர்ஷவின் கருத்தை மறுத்தார் நஷீட்

இலங்கைக்கு உதவுமாறு தாம் விடுத்த கோரிக்கைகளை வெளிநாடுகள் நிராகரித்ததாக வெளியான செய்தியை மாலைதீவுகளின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட் மறுத்துள்ளார். பல நாடுகள் இலங்கைக்கு உதவத் தயாராக இருப்பதாகவும், அதற்கான உதவிகள் கிடைக்கும் என்று தான் நம்புவதாகவும் நேற்றையதினம் (04) டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார். சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளை தொடர்பு கொள்ள நஷீட் மேற்கொண்ட முயற்சிகள் குறித்து பேசிய ஐக்கிய மக்கள் சக்தி எம். பியான ஹர்ஷ டி சில்வா, பல நாடுகள் இலங்கைக்கு உதவ மறுத்துவிட்டதாக ஊடகங்களுக்கு, நேற்று முன்தினம் (13) தெரிவித்திருந்தார். தொடர்ச்சி P2

மன்னார் திட்ட சர்ச்சை

## அதானி குழுமம் கடும் அதிருப்தி

இலங்கை அரசாங்கத்தால் மன்னார் மாவட்டத்தில் அனுமதி வழங்கப்பட்ட மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டம் குறித்து, தற்போது உருவாகியுள்ள விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தாம் ஏமாற்றமடைந்துள்ளதாக இந்தியாவின் அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இந்தியாவின் முதலீட்டின் கீழ் அனுமதி வழங்கப்பட்ட மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டம் குறித்து இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் கோப் குழுவில் வெளிப்படுத்தியிருந்ததுடன், அதன் பின்னர் அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார். தொடர்ச்சி P2

## ஐ.தே.கவுடன் இணைய கட்சிகள் சில தீர்மானம்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கிய அரசியல் கட்சிகள் உள்ளிட்ட மேலும் சில கட்சிகள், தம்முடன் இணைந்துகொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது. குறித்த கட்சிகளுடனான சந்திப்பு ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகம் சிறிகொத்தவில் நடைபெற்றுள்ளது. கட்சிகளின் பிரதிநிதிகள் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டாரவை சந்தித்து கலந்துரையாடி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. தொடர்ச்சி P2

சுற்றுலாப் பயணிகளின்

## வருகையை சுருக்கிய எரிபொருள் வரிசை

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக, சுற்றுலாத்துறை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையத்தின் அழைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## அங்கம்பொரை பாதுகாக்க அனுமதி

'அங்கம்பொர' (உடற் போர்) தற்காப்புக் கலைக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதற்காக 2019 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியிருப்பினும், அதற்கான வர்த்தமானி அறிவித்தல் இதுவரை வெளியிடப்படவில்லை.

அதனால், 'அங்கம்பொர' (உடற் போர்) தற்காப்புக் கலையைப் பாதுகாத்து மேம்படுத்தும் நோக்கில், ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியாளர்களால் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்காக விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## அரச உளழியருக்கு வெளிநாட்டு விடுமுறை

பணிகளில் ஈடுபடுவதற்காக அவர்களின் சிரேஷ்டத்துவம் மற்றும் ஓய்வூதியத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தற்போதுள்ள ஏற்பாடுகளில் திருத்தம் செய்யப்பட்டு குறித்த சுற்றறிக்கை ஆலோசனைகளை வெளியிடுவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

கல்வி அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அரச உத்தியோகத்தர் ஒருவர் தனது பணிக்காலத்தில் உயர்ந்தபட்சம் 05 வருடங்கள் சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுக் கொள்வதற்கு தற்போது ஏற்பாடுகளின் பிரகாரம் இயலுமை உள்ளது. ஆனாலும், குறித்த காலப்பகுதியில் ஓய்வூதியக் கணிப்பைக் கருத்தில் கொள்ளாமை, சிரேஷ்டத்துவத்தைப் பாதிக்கின்றமை மற்றும் ஏனைய நிபந்தனைகளால் அரச உத்தியோகத்தர்கள் அவ்வாறான விடுமுறையைப் பெறுவதில் ஆர்வம் காட்டுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

## அதானி குழுமம் கடும் அதிருப்தி

அதானி நிறுவனத்தின் அழுத்தத்தின் காரணமாகவே இதனை வழங்குவதாக அவர் கூறியுள்ள காரணி குறித்து இந்தியாவின் அதானி குழுமம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கை தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து இந்திய தரப்பு அவதானம் செலுத்தியுள்ளதாகவும், முக்கிய அயல்நாடு என்ற ரீதியில் இலங்கையில் முதலீடுகளை முன்னெடுப்பதே தமது நிறுவனத்தின் நோக்கமாக இருந்ததாக கூறியுள்ள அதானி குழுமம், இலங்கை -இந்திய இருதரப்பு உறவின் ஓர் அங்கமாக பொறுப்புள்ள நிறுவனமாக நாம் இவ்வாறான முதலீடுகளை முன்னெடுக்க ஆர்வத்துடன் செயற்பட்டோம் எனவும், எனினும் இலங்கையின் இந்தச் செயற்பாடு எமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாகவும் அதானி குழுமத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## 3 மாதங்களுக்கு வெள்ளி பூட்டு

நீர் வழங்கல், மின்சார விநியோகம், சுகாதாரம், பாதுகாப்பு சேவைகள், கல்வி, போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் போன்ற அரச நிறுவனங்களுக்கு இந்த விடுமுறை வழங்கப்படாது.

தற்போது நிலவுகின்ற எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பயணிகள் போக்குவரத்துத் தடைகள் ஏற்பட்டுள்ளதுடன், அந்நிலைமையால் அரச ஊழியர்கள் தமது போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. இந்நிலையில் வாரத்தில் கடமை நாள்களில் ஒரு (01) நாள் அரச விடுமுறையை வழங்க அங்கிகாரம் கிடைத்துள்ளது.

இதேவேளை, தொடர்ந்து வரும் காலங்களில் ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கின்ற உணவுத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக தமது வீட்டுத்தோட்டங்களில் அல்லது வேறு இடங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கான வசதிகளை வழங்குவது உகந்ததெனக் கண்டறியப்பட்டுள்ளது.

### எரிபொருள் நெருக்கடி தொடர்ந்தால்

# வெள்ளியே இறுதி பயண்ம்

அரசாங்கத்துடனோ அல்லது வேறு எந்தக் கட்சியுடனோ பிரச்சினைகள் இல்லை எனவும் தற்போதைய எரிபொருள் நெருக்கடியே பிரச்கினை என்றும் குறிப்பிட்ட அவர், இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு இது தொடரும் என்றும் அரசாங்கம் இந்த நாட்டு மக்களுக்கு உண்மையைக் கூற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்களில் நேற்றுமுன்தினம் போதியளவு டீசல் விநியோகிக்கப்பட்ட போதிலும் நேற்றையதினம் (14) டீசல் வழங்கப்படவில்லை என்றார்.

எதிர்வரும் வாரங்கள் மிகவும் முக்கியமானவை எனவும் எரிபொருள் நெருக்கடி மாறாமல் இருந்தால், இந்த அரசாங்கம் மே 9 ஆம் திகதியை விட அதிக வன்முறை விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் எச்சரித்த அவர், நாட்டில் உள்ள மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## வத்தளையில் துப்பாக்கி சூடு: இளைஞர் பலி

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபடும் குழு உறுப்பினர்களிடையே போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் எழுந்த தனிப்பட்ட பகையே துப்பாக்கி பிரயோகத்துக்கு காரணம் என்று பொலிஸாரின் விசாரனைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்தில் சிதறிய தோட்டாக்களின் கவசங்களைக் கொண்டு சூட்டு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டது ரி 56 ரக துப்பாக்கி என்றும் பொலிஸார் கண்டறிந்துள்ளனர். உயிரிழந்தவரின் சடலம், ராகம போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக களனி பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹர்ஷவின் கருத்தை மறுத்தார் நஷீட்

இலங்கைக்கு உறுதியான திட்டம் உள்ளதா என சவூதி அரேபியாவின் பட்டத்து முடி இளவரசர் மொஹமட் பின் சல்மான் கேள்வி எழுப்பியுள்ளதுடன், இலங்கை தனது பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான உறுதியான திட்டத்தை உருவாக்கும் வரை, இந்த விவகாரத்தை பற்றி பேச வேண்டாம் என தெரிவித்துள்ளதாக நஷீட் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஆட்சியாளர் ஷேக் மொஹமட் பின் ரஷீத் அல் மக்தூம், விற்கப்பட வேண்டிய பொருட்களின் பட்டியலை இலங்கை அனுப்பினால் அது குறித்து பரிசீலிப்பதாக கூறியுள்ளார்.

ஹர்ஷ எம்.பியின் அறிக்கை குறித்து கருத்து தெரிவித்த சபாநாயகர் மொஹமட் நஷீட், இது தொடர்பான அறிக்கைகள் தவறானவை என்றும் பல நாடுகள் இலங்கைக்கு உதவ தயாராக இருப்பதாகவும், அதற்கான உதவிகள் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார். பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கான ஒருங்கிணைப்பாளராக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நஷீட் சமீபத்தில் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணைக்கடத்தி மகளிடம் கப்பம் கேட்ட நால்வர் கைது

கப்பம் பெறுவதற்காக, பெண்ணொருவரை கடத்திச் சென்று தடுத்து வைத்திருந்த நால்வர், பூவரசன்குளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வரும் கடத்தப்பட்ட பெண்ணின் மகளுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, அவரது தாய் கடத்தப்பட்டுள்ளதாகவும் 5 இலட்சம் ரூபாய் வழங்கினால் விடுவிப்பதாகவும் மிரட்டியுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதற்கமைய, சந்தேகநபர்களுக்கு பணம் வழங்குவது போல், கடத்தப்பட்ட பெண்ணின் மகளை அனுப்பி, சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26, 49 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் இவர்கள் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

## பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கவும்

### உயரதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தல்

அடுத்த ஆறு மாதங்களுக்கு இந்தியாவில் இருந்து சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் திட்டத்தைத் தயாரிக்குமாறு அதிகாரிகளை அறிவுறுத்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

2022 ஆம் ஆண்டில் இலங்கை, சுமார் 800,000 சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இதன் வருமானம் 800 மில்லியன் அமெரிக்க டொலராகும் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுற்றுலாத்துறையின் பங்குதாரர்களுடன் பிரதமர் அலுவலகத்தில் நேற்று (14) கலந்துரையாடலில் ஈடுபட்டபோதே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டது.

2025 ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக ஈட்டக்கூடிய மற்றும் சுமார் 1.5 மில்லியன் உயர்மட்ட சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கான நீண்டகாலத் திட்டங்களை வகுக்குமாறு அனைத்து பங்குதாரர்களையும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

விருந்தோம்பல் துறையில் பல ஊழியர்கள் தொழிலை கைவிட்டதாலும், ஹோட்டல் பாடசாலைகளில் சேர்வதும் வெகுவாக குறைந்துள்ளதாலும் இளைஞர்களை விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்துமாறும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு பிரதமர் அறிவுறுத்தினார்.

புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், சுற்றுலாப் பயணிகள் உள்ளூர் கலாசாரத்தில் தங்களை மூழ்கடிக்கவும் வாய்ப்பளிக்கும் கலாசார விழாக்களை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் பிரதமர் கலந்துரையாடினார். உலகெங்கிலும் உள்ள அதிகமான எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களை ஈர்க்கும் வகையில் காலி இலக்கிய விழாவை மேம்படுத்துவதற்கான பணிகளை ஆற்றுமாறு அரச சுற்றுலா அதிகாரிகளை பிரதமர் வலியுறுத்தினார்.

## மகஜர் கையளிக்க வடக்கு தீர்மானம்

இந்திய இழுவைப் படகுகளை தடுக்ககோரி நாம் மிகப்பெரிய போராட்டங்களை செய்ததுடன் மகஜர்களை அனுப்பியும் வடக்கு கடற்றொழில் சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.தீர்வு கிடைக்காத காரணத்தால் நாங்கள் தொடர்ந்து தீர்வு கிடைக்கும் வரை எங்கள் இறையாண்மையை பாதுகாப்பதற்கு பொருளாதார நெருக்கடியை தாண்டி போராட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றோம் என்பதை தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுக்கும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ் மக்களுக்கான உரிமைக்காக குரல் கொடுக்கின்ற தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழ் உணர்வாளர்களுக்கும் தமிழக கட்சித் தலைவர்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறோம்.

விசைப்படகுகளை எமது கடல் எல்லைக்குள் வராது தடுத்து நிறுத்தி எம்மை பொருளாதார நெருக்கடியில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற செய்தியை தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைவரிடமும் விடுக்கின்றோம். தமிழகத்தில் காணப்பட்ட மீன்பிடி தடை காலம் முடிவடையவுள்ள நிலையில் இந்திய மீனவர்கள் இலங்கை பகுதிக்குள் அத்துமீறலாம் என்பதால் அதனை கட்டுப்படுத்த கோரியே முதலமைச்சர் ஸ்டாலினுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுக்கும் கடிதத்தை நாளைய தினம் அனுப்ப உள்ளோம் என்றார்.

## ஜனாதிபதி ஊமையா என எண்ணத் தோன்றுகிறது

அவ்வப்போது மக்களை சந்தித்து பலதரப்பட்ட விடயங்களை கலந்துரையாடுவார். எனினும் தற்போதைய ஜனாதிபதி அவ்வாறு அல்ல. அவர் மீது ஆரம்பத்தில் இருந்தே அவதானித்த பாரிய குறைபாடு இதுவாகும் என்றார்.

ரணில் விக்கிரமசிங்க மீது எவ்வளவு விமர்சனங்களை முன்வைத்தாலும் அவர் புத்திசாலி என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் சுயாதீன உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு வருகை தந்து பிரதமர் பதவியை எடுக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

## ஐ.தே.கவுடன் இணைய கட்சிகள் சில தீர்மானம்

இலங்கை மக்கள் தேசிய கட்சி, தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி, முற்போக்கு மக்கள் சேவையாளர் கட்சி, டெலோ, ஜனநாயக மக்கள் காங்கிரஸ், ஐக்கிய காங்கிரஸ் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரம், ஐக்கிய இலங்கை முன்னணி, இலங்கை ஐக்கிய சமாதான கட்சி ஆகியவையே ஐ.தே.கவுடன் இணையவுள்ளன.

நாட்டுக்கு பயனுள்ள அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க குறித்த கட்சிகள் இணக்கம் தெரிவித்தாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## வருகையை சுருக்கிய எரிபொருள் வரிசை

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இலங்கையின் நிலைமையை அவதானிக்கும் எந்தவொரு சுற்றுலாப் பயணியும் தற்போதுள்ள எரிபொருள் வரிசைகளை கண்கூடாக காண்பதாகவும் எரிபொருள் பெறுவதற்காக முழு நாளையும் வரிசையில் செலவிட நேரும் என்பதை அவர்களும் புரிந்து கொள்வார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவது விடுமுறையை அனுபவிப்பதற்காகவே தவிர, வரிசையில் நின்று நேரத்தை செலவிடுவதற்காக அல்ல என்று தெரிவித்த அவர், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான எந்தவொரு திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

அடுத்த சுற்றுலாப் பருவம் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், சாத்தியமான சுற்றுலாப் பயணிகள் எந்த இடத்துக்குச் செல்வது என்பது குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

டொலரை வரவழைக்கும் வகையில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு நாட்டின் தலைவர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

தொழில்துறையின் பங்குதாரர்களுடன் தனித்தனி சந்திப்புகளை நடத்துவதால், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஆகியோர் ஒரே பக்கத்தில் இல்லை என்பது தெளிவாகிறது என்றும் தெரிவித்தார்.

# அமைச்சரவை முடிவுகளில் சில...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தலைமையில் நேற்றுமுன்தினம் (13) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளில் சில...

## 1.முதலாம் தரம் - 2023

பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்தும் போது மேலெழுந்த பிரச்சினைகள் தொடர்பாக அதிபர்கள், சுற்றறிக்கை திருத்தக் குழு, அமைச்சின் விசாரணைப் பிரிவு, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களால் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதுதொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகளையும் கருத்தில் கொண்டு, திருத்தப்பட்ட புதிய சுற்றறிக்கை கல்வி அமைச்சால் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2023 ஆண்டு தொடக்கம் தொடர்ந்து வரும் காலங்களில் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக குறித்த திருத்தப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உட்பிரிவுகளை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 02. அங்கிகாரத்துக்காக சமர்ப்பித்தல்

இலக்க வியாபாரப் பண்ட அறிவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் விதிக்கப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள், அரசிறைப் பாதுகாப்பு கட்டளை விதிக்கப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலொன்றை பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை அங்கிகாரம்.

## 03. ஒழுங்கு விதி வெளியிடல்

வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சலில் இடம்பெறும் ஒருசில மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்காக 06 மாதகாலத்திற்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்காக 2021 டிசெம்பர் 06 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதி செல்லுபடியாகும் காலம் 2022 ஜூலை 01 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. குறித்த கட்டளை மூலம் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவது உகந்ததென இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை பரிந்துரைத்துள்ளது.

அதற்கமைய,புதிய ஒழுங்குவிதியொன்றை வெளியிடுவதற்கும், பின்னர் குறித்த ஒழுங்குவிதிகளை அங்கிகாரத்திற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 04. சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரிச் சட்டம்

2022 ஆம் ஆண்டு வரவு- செலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆண்டொன்றுக்கான மொத்த விற்பனைப் புரள்வு 120 மில்லியன்களை அதிகரிக்கும் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கு 2.5 சதவீதத்தின் கீழ் புதிய வரியாக சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

யாழ். – பாண்டிச்சேரி இடையில்

# படகுச் சேவை

## பலாலி – திருச்சி விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் சாத்தியம்

யாழ்ப்பாணத்துக்கும் பாண்டிச்சேரிக்கும் இடையில் பயணிகள் மற்றும் சரக்கு படகுகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கும், பலாலி - திருச்சி விமான நிலையங்களுக்கு இடையிலான விமான சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்குமான சாதகமான முடிவுகள் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற அமைச்சரவையில் எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், விரைவில் குறித்த போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதனூடாக மண்ணெண்ணை, டீசல் போன்ற எரிபொருட்களையும் உரம், பால்மா, மருந்துப் பொருட்கள் உட்பட்ட அத்தியாவசியப் பொருட்களையும் தேவையானளவு பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மேலும், இதுதொடர்பான முயற்சிகளுக்கு பூரணமான ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, துறைசார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோருக்கு நாட்டு மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# மின்சார சபையின் முன்னாள் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

## கோப் குழு அறிவிப்பு

கடந்த வாரம் கோப் குழுவிற்கு முன்பாக சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்துவிட்டு, பின்னர் அதனை நீக்கிக்கொண்ட இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கோப் குழுவின் தலைவர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார். சர்ச்சைக்குரிய கருத்தை திரும்பப் பெறுவதாக இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் எம்.எம்.ஸி பேர்டினாண்டோ, கடிதம் ஊடாக அறிவித்துள்ளதாகவும் கூறினார்.

இலங்கை மின்சார சபையை, இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்குமாறு இந்திய பிரதமர் ஜனாதிபதியிடம் கூறியதாக, இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் கோப் குழு முன்பாக கூறியிருந்தார். எவ்வாறாயினும் இந்திய பிரதமரின் பெயரைப் பயன்படுத்தியமைக்காக பகிரங்கமாக மன்னிப்பு கோருவதாகவும் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் சர்ச்சைக்குரிய கருத்தை கூறி இரு நாள்களின் பின்னர் இலங்கை மின்சார சபை தலைவர் பதவியில் இருந்துபேர்டினாண்டோ விலகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொசன் பௌர்ணமி தினமான நேற்று (14) கொழும்பு, சிறி வஜிரராம விஹாரை வழிபாடு நிகழ்வுகளில் கலந்துகொண்ட இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், ஆனந்த மகாநாயக்க தேரரை சந்தித்திருந்தார்.

# பொசன் பொதுமன்னிப்பு; 173 கைதிகள் விடுதலை

பொசன் பூரணை தினத்தையொட்டி வழங்கப்பட்ட பொது மன்னிப்பில், நாடளாவிய சிறைச்சாலைகளில் இருந்து 173 கைதிகள், நேற்று (14) காலை விடுவிக்கப்பட்டனர். நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் பரிந்துரைக்கு அமையவே கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். தண்டப்பணம் செலுத்தத் தவறியதால் சிறைதண்டனை அனுபவித்த 141 கைதிகள் தண்டப்பணம் தள்ளுபடி செய்யப்பட்டும், 14 நாள்களுக்கும் குறைவான சிறை தண்டனையுடன் 32 கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்.

அதிகபட்சமாக 23 கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து விடுதலை பெற்று சென்றதுடன், யாழ். சிறையிலிருந்து 7 கைதிகளும் மட்டக்களப்பு சிறையிலிருந்து 4 பேரும் வவுனியா சிறையிலிருந்து 5 பேரும் விடுதலை பெற்றனர். மேலும், குருவிட்ட, மஹர, நீர்கொழும்பு, வீரவில, வாரியபொல, போகம்பர, அநுராதபுரம், களுத்துறை, கொழும்பு மகசின் சிறைச்சாலை, அங்குனகொலபெலஸ்ஸ, பொலன்னறுவை, கேகாலை, மொனராகலை உள்ளிட்ட பல சிறைச்சாலைகளில் இருந்து. கைதிகள் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி வசமுள்ள

# அமைச்சுகள் பறிக்கப்பட வேண்டும்

ஜனாதிபதி எந்தவோர் அமைச்சு பதவியையும் தன்வசம் வைத்திருக்க கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே அரச தாதியர் சங்கம் இருப்பதாக அதன் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார். மேலும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமான மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆகியோர் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். 21ஆவது திருத்தச் சட்டத்தில் இரட்டைக் குடியுரிமை தொடர்பில் எமக்கு தீர்வு ஒன்று வேண்டும். இரட்டைக் குடியுரிமை கொண்ட நபரால் இந்நாட்டிற்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளையும் நாம் அறிந்து வைத்துள்ளோம்.

ஜனாதிபதி தன்வசம் அதிகாரங்களை குவித்து வைத்துக் கொண்டு நாட்டை பாதிப்புக்குள்ளாகும் தீர்மானங்களை எடுத்ததையும் நாம் பார்த்தோம். அது போல பல்வேறு நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் ஊடாக நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

அதிகாரங்கள் தனி நபரிடம் குவிக்கப்படுவதால் ஏற்படும் பாதிப்புகள் என்ன என்பதையும் நாம் கற்றுக் கொண்டுள்ளோம். எனவே, தனிநபரிடம் அதிகாரங்கள் குவிக்கப்படுவது இலங்கை போன்ற நாடுகளுக்கு பொருத்தமற்றது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# "அதிகமான எச்சரிக்கையுடன் செயற்படவும்"

## இலங்கைக்கான பயண ஆலோசனை அறிவிப்பை விடுத்துள்ளது நியூசிலாந்து

இலங்கைக்கான தனது பயண ஆலோசனை அறிவிப்பை நியூசிலாந்து 'அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்கவும்' என்பதில் இருந்து 'அதிகமான எச்சரிக்கையுடன் செயல்படவும்' என்று மாற்றியுள்ளது. அதற்கமைய, 'உள்நாட்டு அமைதியின்மைக்கான சாத்தியம், தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்ந்தும் நீடிக்கின்ற காரணத்தால் இலங்கையில் அதிக எச்சரிக்கையுடன் செயற்பட நியூசிலாந்தின் பயணக் கட்டுப்பாடுகள் திருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்,இலங்கையில் நிலவும் உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் எரிபொருளின் பற்றாக்குறையை மேற்கோள் காட்டி, சமீபத்திய மாதங்களில் நாட்டின் பொருளாதார நிலை கணிசமாக மோசமடைந்துள்ளது என்பதையும் நியூசிலாந்து அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்து, ஐக்கிய இராச்சியம் உள்ளிட்ட மேலும் சில நாடுகளில் இருந்து இலங்கைக்கான சுற்றுலாப்பயண கட்டுப்பாடுகள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் தமிழ்Mirror பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள் பதிவு செய்வதற்கு

Dialog Type TM and send to 87798 Daily Rs.1/=+TAX

HUTCH Type TM and send to 2233 Monthly Rs.30/=+ TAX

SLTMOBITEL Type REG TM and send to 77012 Daily Rs.1/=+TAX

வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான

# தொழில் சந்தை

ஹஸ்பர்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலகம் இணைந்து நாளை (16) வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் 3.30 மணிவரையிலும் வெளிநாட்டு பணியகத்தின் திருகோணமலை கிளையில் (4ஆம் கட்டை, கச்சேரிக்கு அருகில்) வெளிநாட்டு தொழிற்சந்தை(job marketing) ஒன்றை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் 10 ற்கும் மேற்பட்ட முகவர் நிறுவனங்கள், பணியக உயரதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளதால் வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்துள்ளோர், தங்களின் தகுதிக்கு ஏற்ப தொழில்வாய்ப்பை பெற, இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக தம்பலகாமம் பிரதேச செயலக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு தெரிவிக்கிறது.

இது தொடர்பிலான மேலதிக தகவல்களுக்கு B.M Dilsath Fedo 0763060737 மற்றும் J.Krishanthini Fedo 0760103921 ஆகியோருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## சாய்ந்தமருதில் டெங்கு அதிகம்

எம்.எஸ்.எம். ஹனீபா

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது சுகாதார வைத்தியதிகாரி பிரிவு, அதிக டெங்கு நுளம்பு பரவும் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ், செவ்வாய்க்கிழமை (14) தெரிவித்தார்.

ஒரு மாத காலத்திற்குள் அதிகமான டெங்கு நோயாளர்கள் சாய்ந்தமருது சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் இனங்காணப்பட்டு உள்ளதாகவும், டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் பொது மக்கள் மிக அவதானமாக செயற்படுமாறும் கேட்டுள்ளார்.

பொது நிறுவனங்கள், மதஸ்தலங்களில் டெங்கு நுளம்பு பரவும் குடம்பிகள் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாகவும் எதிர்காலத்தில் மிகவும் அபாயமான நிலை ஏற்படுமெனவும் தெரிவித்தார்.

வீடுகள், நீர் கசிவு ஏற்படும் இடங்கள், மலசல கூடங்கள் போன்றவற்றிலும் டெங்கு நுளம்புகளின் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாகவும், கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேசத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு இருந்ததுடன் டெங்கு நோயால் பலர் இறந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## மட்டு.மாவட்டத்தில் 76 யானைகள் பலி

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

கடந்த ஆறு ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் 76 யானைகள் இறந்துள்ளதுடன், 149 யானைகள் காயமடைந்துள்ளதாக, மட்டக்களப்பு மாவட்ட காணி விவகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரங்சனி தெரிவித்தார்.

இக்காலப் பகுதியில் காட்டு யானைகளால் 660 சொத்துகளுக்கும் சேதத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

செங்கலடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட, உன்னிச்சை 10ஆம் கட்டை கிராமத்தில் நீண்டகாலமாக இயங்கிவந்த கோழிப்பண்ணை காட்டு யானை தாக்கத்தால் முற்றாக சேதமடைந்தமையால், குறித்த பண்ணையையே இழுத்து மூடிவிட்டனர்.

## திருக்குளிர்த்தி உற்சவம்

ஆர்.ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு மாவட்டத்தில், பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான வந்தாறுமூலை ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தின் திருக்குளிர்த்தி திருச்சடங்கு உற்சவம் பக்தர்களின் ஆரோகரா கோசத்துடனும், சிலம்பு ஒலியுடனும் திருக்குளிர்த்தி ஆடல் வைபவத்துடன் நேற்று முன்தினம் (13) மாலை நிறைவுபெற்றது.

கடந்த மாதம் 9 ஆம் திகதி அன்று திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, வந்தாறு மூலை 7 குடிமக்களின் பங்களிப்புடன் தொடர்ந்து 5 நாள்கள் திருச்சடங்கு நடைபெற்றது.

மட்டு.சிறைச்சாலையில்

## 4 கைதிகளுக்கு மன்னிப்பு

ரீ.எல்.ஜவ்பர்கான்

பொசன் போயா தினமான நேற்று (14) ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ், மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்து வந்த 4 கைதிகள் நேற்று (14) காலை விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.எல்.விஜயசேகரவின் வழிகாட்டலில், பிரதம ஜெயிலர் ஆர்.மோகன்ராஜ் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறிய குற்றம் புரிந்த தண்டப் பணம் செலுத்தாத கைதிகளே விடுதலை செய்யப்பட்ட கைதிகளாவர்.

## திருகோணமலையில் 4 கைதிகள் விடுதலை

எப்.முபாரக்

திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து ஏழு கைதிகள் விடுதலை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட நிலையில் மூன்று கைதிகளுக்கு வேறு வழக்குகள் உள்ளதால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட நான்கு கைதிகளில் இரண்டு பெண் கைதிகளும் அடங்குவர்.

சிறு குற்றங்கள் புரிந்த, தண்டப்பணம் செலுத்த முடியாத கைதிகளே இவ்வாறு பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## அம்பாறையில் கூடுதலான விலைக்கு அரிசி விற்பனை

எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில், அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டு வருவதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் திங்கட்கிழமை (13) தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை அடுத்து, தட்டுப்பாடு இல்லாதவகையில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். 2283/43ஆம் இலக்க 10.06.2022ம் திகதியன்று அதி விசேட வர்த்தமானியில் உள்நாட்டு வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி ஒரு கிலோ கிராம் 210 ரூபாய் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயித்து வெளியிடப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, அரிசியை பதுக்கி வைத்து, சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து சில வர்த்தகர்கள் கூடுதலான விலைக்கு அரிசியை விற்பனை செய்வதாக பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தொடர்பான தகவல்களை 1977 அல்லது மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சபையின் 0632222355 எனும் தொலைபேசி இலக்கத்திற்கும் அறிவிக்க முடியுமென தெரிவித்தார். இவ்வாறான வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்பின் போது கண்டுபிடிக்கப்படும் வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றினூடாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# கூட்டமைப்பினரை விலகக் கூறுங்கள்

## பிரதமருக்கு ஆனந்தசங்கரி கடிதம்

தமிழ் தேசிய கூட்டமைப்பு சட்டப்படி உருவாக்கப்படவில்லை என்பதால், அந்தக் கட்சியின் உறுப்பினர்களை அதிலிருந்து விலகுமாறு கூறுங்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கடிதமொன்றை எழுதியுள்ளார்.

ஜூன் 13ஆம் திகதியன்று எழுதியுள்ள அந்தக் கடிதத்தில். 'தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்' எனத் தலைப்பிட்டுள்ளார்.

அன்புள்ள பிரதம அமைச்சரே! என விளித்துள்ள அந்தக் கடிதத்தில்,

பாராளுமன்றம் 2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கலைக்கப்பட்டது, பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அனைவருக்கும் கொடுத்தது. பிரதம அமைச்சர் பதவியை நீங்களும் உறுப்பினர் பதவியை நானும் இதனால் இழந்தோம். ஆனால், நமக்குள்ள வித்தியாசம் யாதெனில்,

நீங்கள் எப்போதும் திட்டமிட்ட சதியை மீறி, பாராளுமன்றம் செல்லலாம். ஆனால் நான் மட்டும் சதித்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டமையால் இன்று வரை ஏறக்குறைய 18 ஆண்டுகள் பாராளுமன்றம் செல்ல முடியவில்லை.

எந்தவிதமான அதிகாரமும் இல்லாத சு.ப. தமிழ்செல்வன், இலங்கை தமிழரசுக் கட்சியை புதுப்பிக்கின்ற உரிமையற்றவராவார். அதேபோல், இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஏற்கெனவே ஒன்று கலந்தமையால் இரா. சம்பந்தன், மாவை. சேனாதிராஜா ஆகியோர் தமிழரசுக் கட்சியை புதுப்பிக்கின்ற அதிகாரமற்றவர்களாவர்.

தனது கணவர், தமிழரசுக் கட்சியின் பெயரையோ சின்னத்தையோ எவரேனும் திருடி விடக்கூடாது என்பதற்காக, தமிழரசுக் கட்சியின் பதிவை நடைமுறையில் வைத்திருந்தார் என அன்னாரின் பாரியார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பல தடவைகள் கூறியுள்ளார்.

நாகரிகம் அடைந்த ஒரு சமூகத்தில், கௌரவமற்ற செயலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஈடுபடுவார்களாக இருந்தால், தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழரசுக் கட்சியும் சட்டப்படி இயங்க முடியாது. பெருந் தலைவர்களாகிய சா.ஜே.வே. செல்வநாயகம், ஜீ.ஜீ. பொன்னம்பலம், சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோர் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியை, தமிழ் மக்களின் நலன் கருதி செயற்பட, இடையூறு செய்யாமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நற்செயல்களை கடைப்பிடித்தால், சிறந்த ஜனநாயக ஆட்சிக்கு வழிவகுக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## பெருவிழா

எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம், பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயப் பெருவிழா, திங்கட்கிழமை (13) வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்தப் பெருவிழாவில் புனித அந்தோனியார், வீதி உலா வந்து பக்தர்களுக்கு ஆசி வழங்கினார். இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பெற்றோல் கொள்வனவுக்காக வடமராட்சியில் நீண்ட வரிசை

எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம், வடமராட்சி, நெல்லியடி, கிராம கோடு ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களுக்கு பெற்றோல் நிரப்புவதற்காக மக்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

கடந்த இரு நாள்களாக வடமராட்சியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் இல்லாத நிலையில், நேற்று (14) பெற்றோல் விநியோகம் இடம்பெற்றுள்ளது.

இந்தநிலையில், நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பிரதேச செயலகம் ஊடாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குரிய அட்டைக்கு ரூபாய் 2,500க்கு பெற்றோல் வழங்கப்பட்டது.

பிரதேசத்திற்கு வெளியே இருந்து வந்த அல்லது பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கு ரூபாய் 500க்கு மட்டுமே பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு உட்பட்ட கிராம கோடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஓட்டோக்களுக்கு ரூபாய் 1,500 க்கும், மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபாய் 1,000 க்கு மட்டுமே பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

## இராணுவத்தினரால் குளிர்பானம் வழங்கல்

என்.ராஜ்

பௌத்தர்களின் புனித நாளான பொசன் பௌர்ணமி தினமான நேற்று (14) யாழில் இராணுவத்தினரால் குளிர்பானம் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

512 ஆவது பிரிகேட் இராணுவத்தினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வைத்து பொதுமக்களுக்கு குளிர்பானம் வழங்கிவைக்கப்பட்டது.

நிலாவரைக் கிணறு விவகாரம்

## மீண்டும் விசாரணை

### ஆஜராகுமாறு தவிசாளருக்கு நீதிமன்றம் கட்டளை

எம்.றொஷாந்த்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்க்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை, மல்லாகம் நீதிமன்றில் இன்று (15) எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்டவர்கள் தடைகளை ஏற்படுத்தினர் எனக் குற்றம் சாட்டப்பட்டு 2021 ஏப்ரல் மாதம் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

எனினும், தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானியில் 'நிலாவரைக் கிணறு' என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. குற்றவியல் சட்டக் கோவையின் பிரகாரம் இவ்வழக்கை சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றே மேற்படி வழக்கின் குற்றப்பத்திரத்தினைத் பொலிஸார் தாக்கல் செய்திருக்கவேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் தவிசாளர் அங்கு என்ன நடக்கின்றது எனக் கேள்வி எழுப்பியமையை அரச கடமைக்கு தடை ஏற்படுத்தியதாகக் கருத முடியாது.

நிர்வாக ரீதியாக இரு அரச நிறுவனங்களுக்கு இடையே எழும் பிரச்சினையை குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் அணுகமுடியாது. எனவே, இவ்வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என தவிசாளர் சார்பில் மன்றில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதையடுத்து, இவ்வழக்கினை தொடர்ந்து நடத்துவதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று வழக்கினைத் தொடருமாறு நீதிபதிஅறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், மீண்டும் இவ்வழக்கில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரை முதலாவது சந்தேக நபராக அடையாளப்படுத்தி மன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

## வவுனியாவில் 6 பேர் விடுதலை

க. அகரன்

வவுனியா விளக்கமறியில் சிறைச்சாலையில் சிறு குற்றங்களுடன் தொடர்புடைய 6 கைதிகள் பொது மன்னிப்பின் அடிப்படையில் பொசன் தினமான நேற்று (14) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆறு பேரில் ஒருவருக்கு, மற்றுமொரு வழக்கு இருந்தமையால் அவர் மீண்டும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதில், வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையின் அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன், பிரதி அத்தியட்சகர் சந்திரசிறி உட்பட உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# தானசாலைகள்...

பொசன் பூரணை தினமான நேற்று (14) மலையகத்தின் பல இடங்களிலும் தானசாலைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. குறிப்பாக மொனராகலை, கண்டி, கேகாலை, மஸ்கெலியா உள்ளிட்ட பல இடங்களில் பாண், மரவள்ளிக்கிழங்கு, ஐஸ்கிறீம், பிரைட் ரயிஸ், கடலை, சாப்பாட்டு பொதி என்பன வழங்கப்பட்டன.

மலையக நிருபர்கள்

கணவன், மகனுடன்

# ஏலம் பறிக்கச் சென்ற பெண் மாயம்

## 11 நாள்களாகியும் வீடு திரும்பவில்லை

■ எம். குமார்

இறக்குவானை, சூரியகந்த தோட்டத்தை சேர்ந்த 49 வயதுடைய எஸ்.மனோரஞ்சனி என்ற பெண், ஏலம் பறிக்கச் சென்று காணாமல் போயுள்ளார்.

சூரியகந்த பகுதியினுடாக சிங்கராஜ வனப்பகுதிக்கு ஏலம் பறிப்பதற்காக கடந்த மூன்றாம் திகதி சென்றுள்ளார்.

கணவன், மகனுடன் குறித்த பெண் சிங்கராஜ வனப்பகுதிக்குள் சென்று காணாமல் போனதாகவும், இதனையடுத்து அவரது கணவரும் மகனும் காட்டில் பல மணி நேரம் தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

பின்னர், இவ்விருவரும் வீட்டுக்குத் திரும்பிவந்து அயலவர்களிடம் தெரிவித்துள்ளதுடன், சூரியகந்த பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஊர் மக்களும் காட்டுக்குள் சென்று, அந்தப் பெண்ணைத் தேடிய போதிலும் எந்த விதமான பயனும் கிடைக்க வில்லை.

இதனையடுத்து, குருவிட்ட இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்கள், பொலிஸார், அத்தோட்ட மக்களுடனும் இணைந்து அப்பெண்ணை, மூன்று நாள்களாக தேடும் பணியில் ஈடுபட்டு வந்த நிலையிலும் பெண்ணைக் கண்டுபிடிக்க முடியவில்லை என தெரிவித்துள்ளனர்.

# டீசல் திருடிய மூவர் ஹட்டனில் கைது

■ எம்.கிருஸ்ணா

ஹட்டன் பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ்ஸில் டீசல் திருடிய சந்தேகத்தின் பேரில் மூவர் ஹட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன்- எபேட்ஸிலி வீதியில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸிலேயே இவ்வாறு டீசல் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பஸ் உரிமையாளர் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்து, 140 லீற்றர் டீசலை நிரப்பி வந்து பஸ்ஸை நேற்று முன்தினம் (13) நிறுத்தி வைத்திருந்துள்ளார்.

எனினும், அந்த பஸ்ஸிலிருந்து 120 லீற்றர் டீசல், இரவோடு இரவாக திருடப்பட்டுள்ளது.

இவ்வாறு திருடப்பட்ட 120 லீற்றர் டீசலில், 100 லீற்றர் வரை திருடியவர்கள் பயன்படுத்தி விட்டு, மிகுதி 20 லீற்றரை வீடொன்றில் மறைத்து வைத்திருந்த நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

# கலஹா சிறுமி யாழில் சிக்கினார்

■ யோகா

கலஹா, ஹயிட் தோட்டத்தில் காணாமல் போன 14 வயதான இராசலிங்கம் பிரியதர்சினி என்ற சிறுமி, 6 நாள்களின் பின்னர் யாழ்ப்பாண பஸ் தரிப்பிடத்திலிருந்து 11 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சிறுமி காணாமல் போனமை தொடர்பில், ஊடகங்களில் வெளியான செய்தியை அவதானித்த வர்த்தகர் ஒருவர், சிறுமி பஸ் தரிப்பிடத்தில் இருப்பதை கண்டு, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

சிறுமி கலஹா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு உள்ளதுடன், அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு, அவர் கண்டி வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும் நீதிமன்ற வைத்தியரிடம் இன்று (15) முன்னிலைப்படுத்தப்பட உள்ளார் என்றும் கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிறுமி தெரிவித்துள்ளதாவது: 11ஆம் திகதி காலை, தான் யாழ்ப்பாணத்திலுள்ள தனது நண்பியைத் தேடிச் சென்றதாகவும், செல்லும் வழியில் தனது அலைபேசி செயலிழந்ததால் நண்பியுடன் தொடர்புகொள்ள முடியாமல், பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்ததாகவும் சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

வீட்டாருடன் ஏற்பட்ட மனகசப்பால் தனது ஆடைகளை எடுத்துக்கொண்டு, 5ஆம் திகதி மாலை யன்னல் வழியாக வீட்டிலிருந்து வெளியே பாய்ந்து, திகனையிலுள்ள அவரது நண்பி ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அங்கு நான்கு நாள்கள் தங்கியிருந்த குறித்த சிறுமி, அந்த வீட்டில் உள்ளவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைய தனது வீட்டுக்குச் செல்வதற்காக கண்டி பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றுள்ளார்.

அப்போது அவரது கையில் 9,000 ரூபாய் பணம் இருந்ததாகவும், அந்த பணத்தில் 4,000 ரூபாய் செலவில் அலைபேசி ஒன்றை கொள்வனவு செய்து, தனது வீட்டுக்குச் செல்ல மனமில்லாமல், யாழ்ப்பாணத்திலுள்ள தனது நண்பியின் சகோதரி ஒருவருக்கு அழைப்பை ஏற்படுத்தி, தனக்கு தொழில் ஒன்றை பெற்றுத் தருமாறு தெரிவித்துள்ளார்.

எனினும் தொழில் செய்வதற்கு வயது போதாது என்றும்

**“ வீட்டாருடன் ஏற்பட்ட மனகசப்பால் ஆடைகளை எடுத்துக்கொண்டு, யன்னல் வழியாக வீட்டிலிருந்து வெளியே பாய்ந்து, திகனையிலுள்ள நண்பியின் வீட்டுக்குச் சென்றுள்ளார். அங்கு நான்கு நாள்கள் தங்கியிருந்த குறித்த சிறுமி, அந்த வீட்டிலுள்ளவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைய தனது வீட்டுக்குச் செல்வதற்காக கண்டி பஸ் தரிப்பிடத்துக்கு சென்றார்....**

அதுவரை விடுதியொன்றில் தங்கியிருக்குமாறும் அச்சகோதரி தெரிவித்ததையடுத்து, அச்சிறுமி யாழ்ப்பாணம் செல்வதற்காக கண்டியிலிருந்து பஸ் ஏறியுள்ளார்.

கண்டியில் 7 மணிக்கு வவுனியா பஸ்ஸில் ஏறி 11 மணியளவில் வவுனியாவை சென்றடைந்துள்ளார். பின்னர் இரவு முழுவதும் வவுனியா பஸ் தரிப்பிடத்தில் தங்கியிருந்த குறித்த சிறுமி, அதிகாலை 4.20 மணியளவில் யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் யாழுக்குச் சென்றுள்ளார். நண்பியின் சகோதரியுடன் தொடர்பை ஏற்படுத்த முயன்ற போது. சிறுமியின் அலைபேசி பெட்டரி செயலிழந்துள்ளது.

இதன்போது பஸ் தரிப்பிடத்துக்கு அருகிலுள்ள கடைக்குச் சென்று, தனது அலைபேசியின் பெட்டரியை சார்ஜ் செய்து தரும்படி கேட்டபோதே, அந்த வர்த்தகர் சிறுமியை அடையாளம் கண்டு பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய, குறித்த சிறுமியின் சகோதரி மற்றும் உறவினர்கள் இருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, சிறுமியை அழைத்து வந்து, கலஹா பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பில் சிறுமியின் சகோதரி மற்றும் தாயிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதுடன் கலஹா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மாத்தளை பொலிஸ் நிலையத்தில்

# வீட்டுத்தோட்டம் வெற்றியை தந்தது

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை பொலிஸ் தலைமையக வளாகத்தில் வீட்டுத் தோட்ட செய்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உபுல் குணவர்தனவின் தலைமையில், சகல பொலிஸாரின் பங்களிப்புடனும் இந்த வீட்டுத்தோட்ட செய்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கு தீர்வாக, பொலிஸ் நிலையத்துக்கு வரும் மக்களுக்கான முன்மாதிரியான செயற்பாடாகவே இது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளையில் நான்கு கடைகளில்

# அரிசி விற்பனைக்கு தற்காலிகத் தடை

■ ராமு தனராஜா

பதுளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில், அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்த நான்கு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பதுளை நகரில் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளால் நேற்று முன்தினம் (13) முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, குறித்த வர்த்தகர்கள் சிக்கியுள்ளனர்.

இதன்போது அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை தொடர்பில் நான்கு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக எதிர்வரும் 27 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

அத்துடன், மறு அறிவித்தல் விடுக்கப்படும்வரை நான்கு விற்பனை நிலையங்களுக்கும் அரிசி விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

# ஒவ்வொரு துறையாக முடங்கத் தொடங்குகின்றது

ஒவ்வொரு துறையில் இருந்தும் விடுக்கப்படும் அதிரடியான அறிவிப்புகளைப் பார்க்குமிடத்து, நாடு முழுமையாக முடங்குவது வெகுதொலைவில் இல்லை என்றே எண்ணத்தோன்றுகின்றது. அந்தளவுக்குப் பொருளாதார நெருக்கடி உச்சம் தொட்டுநிற்கின்றது.

அத்தியாவசிய அரச நிறுவனங்களைத் தவிர, ஏனைய அரச நிறுவனங்களில் கடமையாற்றுவோருக்கு எதிர்வரும் மூன்றுமாத காலத்துக்கு வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறானவர்கள் வீட்டுத்தோட்டங்களை மேற்கொள்ளவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தனியார் துறைகளில் பல நிறுவனங்களைச் சேர்ந்த பலரும், கடந்த பல மாதங்களாக 'வீட்டில் இருந்து வேலை' எனும் முறைமையின் கீழே பணியாற்றுகின்றனர். மின்வெட்டு அமலில் இருக்கும் வேளையில், அந்த முறைமையானது எவ்வளவு கடினமானது என்பதெல்லாம் திணைக்களத்துக்குப் பொறுப்பானவர்களுக்கு மட்டுமே தெரியும்.

பெருநாள்களுக்கு இரண்டொரு நாள்களுக்கு முன்னர், சாதாரண பஸ்களில் எவ்வளவு சனநெரிசலாக இருக்குமோ, அந்தளவுக்கு அன்றாடம் சனநெரிசல் ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே, குறிப்பிட்டதைப் போல சில வழித்தடங்களில் பஸ்கள் முற்றாக இல்லை. இன்னும் சில வழித்தடங்களில் பஸ்களின் எண்ணிக்கைகள் குறைந்துள்ளன. இதற்கிடையே, வெள்ளிக்கிழமையுடன் தனியார் பஸ் சேவைகளும் முடங்குமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல நாள்கள் நீண்ட வரிசையில் நின்றே, எரிபொருளை பெற்றுக்கொள்ளவேண்டும். அந்த நெருக்கடி தீர்க்கப்படாத வரையில், ஒவ்வொரு துறையும் கொஞ்சம், கொஞ்சமாக முடங்கும் என்பதில் ஐயமில்லை. இது, இன்னுமின்னும் நெருக்கடியை அதிகரித்துவிடும்.

பாம்பொன்று தீண்டிய சிறுவனை, பெற்றோர் வைத்தியசாலைக்குச் எடுத்துச் சென்றபோதிலும், விஷத்தை தடுப்பதற்கான மருந்துகள் இன்மையால் அந்தச் சிறுவன் உயிரிழந்துவிட்டான். அநுராதபுரத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து அச்சிறுவனின் பெற்றோர். "நாங்கள், ஒரு டொலரைக்கூட களவெடுக்கவில்லை" என கதறியழுந்தனர்.

அமெரிக்க டொலர் பிரச்சினையால் இறக்குமதி செய்வதில், தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. இரண்டொரு நாள்களுக்கு இறக்குமதி ஸ்தம்பிதமடையுமாயின், அந்தந்த பொருட்களுக்கு உள்ளூர் சந்தையில் தட்டுப்பாடு நிலவும்; வரிசைகளும் நீண்டு கொண்டே செல்லும்; பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் விலை அதிகரிப்பதை அறிந்துகொண்ட பெரும் முதலைகள் பதுக்கிவைத்துக்கொள்வர்.

தேவைக்கேற்ப இறக்குமதி செய்யமுடியாத நிலைமையில், இரண்டொரு வாரங்களுக்கு களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான வகையில் இறக்குமதியை எதிர்பார்க்க முடியாது. ஆக, இருப்பதைக் கவனமாக பயன்படுத்தவே வேண்டும்.

மக்கள் அனைவரும் வீதிகளுக்கு இறங்கிவிட்டால், நிலைமையை கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். ஒவ்வொரு நாளும் ஏதோவொரு வகையில் தியாகம் செய்துகொண்டிருப்போர் பொறுமையை இழந்துவிட்டால், அதுவே பெரும் சிக்கலாகிவிடும்.

ஆகையால், ஒவ்வொரு துறையிலும் இனங்காணப்படும் முன்னுரிமைக்கு முக்கியத்துவமளித்து நாட்டை இயங்கச்செய்யவேண்டும். அதனூடாகவே, ஓரளவுக்கேனும் நிலைமையை சமாளிக்கமுடியும். இல்லையேல் முழு முடக்கத்துக்கே வித்திடும்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

ஏழை எளியவர்கள், வலுவற்றவர்கள் என எத்தரத்தினரும் எமக்குத் தேவையானவர்கள் என உணர்ந்துகொள்க! சருகும் பசளையாகும். புவனத்தில் எல்லாமே ஏதோ ஒருவகையில் பயன்பட்ட வண்ணமே இருக்கின்றன. மனிதனை மனிதன் உதாசீனம் செய்வது நல்லதல்ல. இறைவனுடைய படைப்பை வெறுத்தலாகாது.

உயர்வர்க்கத்தினரில் அநேகர் தங்களை ஒத்தவர்களையே நாடுவார்கள். ஏழைக்கு ஏழையே உதவி. நிகழ்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் போதே தர்மங்களை செய்வதில் ஆர்வம் கொண்டு இயங்க வேண்டும். இவை எல்லாமே எமக்கான அரிய சந்தர்ப்பங்களேயாகும்.

வசதிகூடிய செல்வந்தர்கள் அனைவரையும் வெறுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களில் அநேகர்கள் நற்பணிகளை ஆற்றிய வண்ணமே உள்ளனர். உலகில் அனைத்து மாந்தர்களுக்கும் ஒரு பொதுமை நற்பண்பு இருந்தே தீரும். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அது வெளிப்படும். அன்பு, பாசம், இரக்கம் என்பது பொதுவானது. இந்த நல்ல உலகிலேயே வாழ்ந்து வருகின்றோம்.

–பருத்தியூர் பால வயிரவநாதன்

# வீட்டுத்தோட்டத் திட்டத்தால் உணவு பஞ்சத்தை எதிர்கொள்ள முடியுமா?

எம்.எஸ்.எம்.ஐயூப்

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக, இலங்கையில் மிக விரைவில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படப் போவதாக, தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பலர் கூறுகிறார்கள். கடந்த வருடம், இரசாயன பசளை இறக்குமதிக்கு அரசாங்கம் விதித்த தடையின் காரணமாக, உள்நாட்டு உணவு உற்பத்தி வெகுவாகப் பாதித்தமையும் நாடு எதிர்நோக்கியிருக்கும் வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினையின் காரணமாக உணவு இறக்குமதி செய்ய முடியாமல் இருப்பதுமே, இந்த அச்சத்துக்கு காரணங்களாகும்.

இந்த நிலைமையால், நாட்டில் பட்டினிச் சாவு அதிகரிக்கும் என்றும் உணவுக்காகக் கலவரங்கள் ஏற்படலாம் என்றும் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. ஏற்கெனவே நாட்டில் கொள்ளை, வழிப்பறிகள் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

பிரதமராகவும் நிதி அமைச்சராகவும் அண்மையில் நியமிக்கப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த மூன்றாம் திகதி இலங்கை மன்றத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில், உணவுப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டு உரையாற்றும் போது, "விரையில் இலங்கை மக்கள், இரண்டு வேளை உணவில் திருப்தி காண வேண்டிய நிலைமை உருவாகும்" என்று கூறியிருந்தார்.

அதை அடுத்து, கடந்த ஏழாம் திகதி நாட்டின் பொருளாதார நிலைமையைப் பற்றி, நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்திய பிரதமர், "நாட்டு மக்களில் 73 சதவீதமானோர், ஏற்கெனவே தமதுணவின் அளவையும் தரத்தையும் குறைத்துக் கொண்டுள்ளதாக உலக உணவுத் திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது" என்று கூறியிருந்தார்.

அத்தோடு, "இலங்கையின் சனத்தொகையில் 22 சதவீதமானவர்கள் உணவு இல்லாமல் இருக்கிறார்கள்" என இலங்கையிலுள்ள ஐ.நா பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்தி, வெள்ளிக்கிழமை (10) தெரிவித்திருந்தனர்.

இலங்கையில் அண்மைக் காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதில்லை. தற்போதைய இளம் தலைமுறையினருக்கு, அவ்வாறானதொரு நிலைமையைப் பற்றிய அனுபவமும் இல்லை. ஆனால், தற்போது முதியவர்களாக இருக்கும் தலைமுறையினர் 1970களின் ஆரம்பத்தில், பாரியதோர் உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கினர்.

அக்காலத்தில், இந்தப் பஞ்சத்தால் தோட்டத் தொழிலாளர்களே மிகவும் பாதிக்கப்பட்டனர். நாட்சம்பளத்தில் வாழும் அவர்களால், கிராமத்தவர்களைப் போல் சுற்றுப்புற சூழலில், உணவு வகைகளை தேடிக் கொள்வதும் கடினம். அவர்கள், நகரப்புற ஏழைகளைப் போல், குறைந்த அளவிலாவது ஆட்சியாளர்களினதும் அதிகாரிகளினதும் கண்ணில் படுவதும் இல்லை. தற்போதைய நிலையிலும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டால், தோட்டத் தொழிலாளர்களே மிகவும் மோசமாக பாதிக்கப்படுவார்கள்.

உலக உணவுத் திட்டத்தின் ஆய்வில் குறிப்படப்பட்டுள்ள நிலைமையை, சந்தைகளிலும் கடைகளிலும் மிகத் தெளிவாக புரிந்து கொள்ள முடியும். மக்கள் முன்னரைப் பார்க்கிலும் குறைந்த அளவிலேயே பொருட்களை கொள்வனவு செய்வதாக, வியாபாரிகள் கூறுகிறார்கள்.

காரணம் மிகத் தெளிவானதாகும். கடந்த ஒரு வருடத்தில் மட்டும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை, 200 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதாவது, விலை மும்மடங்காகியுள்ளது. ஆனால், வர்த்தகர்கள் உள்ளிட்ட தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வாய்ப்புள்ளவர்கள் தவிர்ந்த, ஏனைய சகலரினதும் வருமானம் குறைந்துள்ளது. பல தனியார் நிறுவனங்களில் ஊழியர்களின் சம்பளம், கொவிட்-19 நோய் காரணமாக, தொழில் திணைக்களத்தின் அனுமதியுடன் 2020 ஆம் ஆண்டு முதல் குறைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் கூறுமளவுக்கு பிரச்சினை பாரதூரமானதல்ல என்றும், அவர் அரசியல் கண்ணோட்டத்தில் அவ்வாறு மக்களை அச்சமூட்டி வருவதாகவும் சிலர் கூறுகின்றனர். ஆயினும் விலைவாசி உயரும் வேகத்தையும் அடுத்த பெரும் போகம் வரை பசளைப் பிரச்சினை நீடிக்கும் என்பதையும் கருத்திற் கொள்ளும் போது, மேலும் ஓரிரு மாதங்களில் நிலைமை, பிரதமர் கூறுமளவுக்கு இல்லாவிட்டாலும் மிகவும் மோசமாகும் என்றே தெரிகிறது.

இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடந்த வாரம் ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதியையும் ஐ.நா அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் இலங்கைக்கான பிரதி இணைப்பாளரையும் சந்தித்து, இலங்கைக்கு உதவிகளைப் பெறுவது தொடர்பாக கலந்துரையாடி இருந்தார்.

இதற்கு முன்னரே, இலங்கைக்கு உதவி வழங்குமாறு கோரி ஐ.நா உலகளாவிய கோரிக்கையொன்றை விடுக்க தீர்மானித்திருந்தது. அந்தக் கோரிக்கை வியாழக்கிழமை (09) ஆம் திகதி ஐ.நாவால் வெளியிடப்பட்டும் இருந்தது. அதன் மூலம், எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு உணவு, விவசாயம், சுகாதாரம் ஆகிய துறைகளுக்கு 1,600 கோடி ரூபாய் உதவியை ஐ.நா எதிர்ப்பார்க்கிறது.

இதற்கிடையே, வரப்போகும் பெரும் உணவுப் பஞ்சத்தை எதிர்நோக்கும் வகையில், விவசாயத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பயிர்ச் செய்கைக்கு பொருத்தமான சகல காணிகளிலும் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அதன்படி பெருந்தோட்டத்துறையில் 23 தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத 9,000 ஹெக்டயர் காணி இருப்பதாகவும் அவற்றை உணவுப் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்துமாறும் ஜனாதிபதி அண்மையில் அதிகாரிகளுக்குப் பணித்தார்.

அரசாங்கத்தின் இந்த முயற்சியைப் பார்க்கும் போது, சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி கோருவதற்கு எடுத்த முடிவைப் போலவே, அரசாங்கம் சகல முக்கிய முடிவுகளையும் தாமதித்தே எடுக்கிறது போலும்! இரசாயன உர இறக்குமதி தடைசெய்யப்பட்டபோதே, அதாவது இந்த வருட ஆரம்பத்திலேயே உணவுத் தட்டுப்பாடு ஏற்படப் போகிறது என, கமநலத்துறை நிபுணர்களும் எதிர்க் கட்சியினரும் எச்சரித்தனர்.

எனினும், அரசாங்கம் அதனை பொருட்படுத்தவில்லை. விவசாய அமைச்சராக இருந்த மஹிந்தாநந்த அலுத்கமகே, உணவுப் பஞ்சம் பற்றிய எச்சரிக்கை, எதிர்க்கட்சியினரின் பிரசாரம் என்றும் உணவுப் பஞ்சம் ஏற்பட வாய்ப்பே இல்லை என்றும் கூறினார். விவசாய நடவடிக்கைகளுக்கான அரசாங்கத்தின் தற்போதைய முயற்சிகள், பாரதூரமாக சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவுகளாயின் இந்த வருட ஆரம்பத்திலேயே, அந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

தற்போதைய நெருக்கடிக்கு, அரசாங்கமே தான் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதில் எவ்வித விவாதத்துக்கும் இடமில்லை. ஆனால், அதனால் தற்போதைய முயற்சிகள் வெற்றியளித்தால், இந்த அழிவுக்கு நாட்டை இட்டுச் சென்ற அரசாங்கம், அரசியல் ரீதியாக மீண்டும் பயனடையும் என்று எதிர்க்கட்சிகள் சிந்தித்தால் அது, மக்கள் நலனை மறந்த சிந்தனையாகும். அரசாங்கம் இதுவரை நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் சென்றாலும், தாம் அரசியல் ரீதியாக பயன்பெறுவதற்காக நாடு அதே அழிவுப் பாதையிலேயே செல்ல வேண்டும் என்று சிந்திக்க, எதிர்க்கட்சிகளுக்கு தார்மிக உரிமை இல்லை.

எவ்வாறாயினும் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை உள்ளிட்ட அரசாங்கத்தின் தற்போதைய விவசாய முயற்சியானது, திட்டமிடப்பட்ட ஒன்றல்ல என்பதாகவே தெரிகிறது. இதுவரை விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு, எதிர்வரும் பெரும்போகத்துக்கே உரம் வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கூறியிருக்கிறார். அவ்வாறு இருக்க, தோட்டப்புறங்களிலும் வீட்டுத் தோட்டங்களிலும் இப்போது புதிதாக விவசாயம் செய்ய ஆரம்பித்திருப்போர், எங்கிருந்து உரத்தை பெறப் போகிறார்கள்?

திட்டமிடப்படாமையால் பெரும் பிரசாரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு பாரிய பயிர்ச் செய்கைத் திட்டங்கள், இறுதியில் பெரும் தோல்வியிலேயே முடிவடைந்தன. ஒன்று, முன்னாள் பிரதமர் டட்லி சேனாநாயக்கவால் 1965- 1970 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதாகும். அது வெறும் பிரசாரமாக மட்டுமே இருந்தது. 1970- 1977 காலப்பகுதியில் 'விவசாயப் போர்' என்ற பெயரில் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கவால் ஆரம்பிக்கப்பட்ட விவசாய அபிவிருத்தி திட்டம், மக்களுக்கு பெரும் கொடுமையாகவே அமைந்தது.

உணவுப் பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டது. பாரிய பிரசாரத் திட்டமொன்று முடுக்கிவிடப்பட்டது. எனினும், மலைநாட்டில் பெரும்பாலான விவசாயிகள் காணி அற்றவர்களாக இருந்தமையாலும் வரண்ட பிரதேசத்தில் நீர்ப்பாசன வசதிகள் இல்லாமையாலும் வர்த்தகர்களின் கடும் சுரண்டலின் காரணமாகவும், மக்கள் விவாசயத்தின் பக்கம் ஈர்க்கப்படவில்லை. விவசாயத்தில் ஈடுபட்டவர்களும் தமது முயற்சியால் திருப்பியடையவில்லை.

இறுதியில், சுமார் நான்கு வருட காலமாக நாடு பெரும் உணவுப் பஞ்சத்தை எதிர்கொண்டது. வரலாறு காணாதவாறு, 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று வெற்றி பெறுவதற்கு, அந்தப் பஞ்சம் ஐக்கிய தேசிய கட்சிக்கு உதவியது. இந்த வரலாற்றில், தற்போதைய ஆட்சியாளர்களுக்கும் கற்க பாடங்கள் இருக்கின்றன.

## கடிதங்கள்

### நுகர்வோரின் கவனத்துக்கு

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால், பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்கள் சந்தைகளில் காணப்படுகின்றன. இது குறித்து பொதுமக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

கடந்த சில தினங்களாக நுகர்வோர் அதிகார சபையினரால் திடீர் சோதனை நடவடிக்கைள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனூடாக, பாவனைக்கு உதவாத பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், விலைகளை அதிகரித்து விற்பனை செய்த வியாபாரிகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனினும், நுகர்வோரைத் தொடர்ச்சியாக ஏமாற்றிக் கொண்டிருக்கும் வர்த்தகர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இது சாதாரண பெட்டிக்கடை முதல், பெரும் வியாபார ஸ்தலங்களிலும் இடம்பெறுகின்றன.

விலை அதிகரிப்பால், பெரும் கடைகளை பெரும்பாலானோர் தவிர்த்து வந்தனர். எனினும், சிறுசிறு தள்ளுவண்டில் கடைகள் ஆங்காங்கே முளைத்துவிட்டன. அவ்வாறான கடைகளிலும் நாளுக்கு நாள் விலைகள் அதிகரித்துள்ளன.

இவை குறித்தும் கவனம் செலுத்துமாறும் பலரும் தமிழ்மிரருக்கு கடிதங்களை அனுப்பிவைத்திருந்தனர்.

('தமிழ்மிரர்' வாசகர்கள்)

# திருச்சொரூப பவனி

கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் திருச்சொரூப பவனி, நேற்று முன்தினம் (13) இரவு, வெகுவிமரிசையாக இடம்பெற்றது.

# ஒளியூட்டல்

வரலாற்று புகழ்மிக்க தந்திரிமலை ரஜமஹா விஹாரைக்கு ஒளியூட்டும் நிகழ்வு, வரையறுக்கப்பட்ட விஜய பத்திரிகை நிறுவனம் மற்றும் லங்காதீப பத்திரிக்கை ஏற்பாட்டில், 19 ஆவது தடவையாகவும் நேற்றுமுன்தினம் (13) இரவு முன்னெடுக்கப்பட்டது. பொசன் தினத்தையொட்டியே ஒளியூட்டப்பட்டது.

# பொசன்

பொசன் தினமான நேற்று (14) நாடளாவிய ரீதியிலுள்ள விஹாரைகள், கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன; அன்னதானமும் வழங்கப்பட்டது. இன்னும் பல வகையான தாகசாந்திசாலைகளும் அமைக்கப்பட்டிருந்தன. கொழும்பு–02 கங்காராமை விஹாரையில், சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டவர்களையும் அன்னதானத்தில் பங்கேற்றவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரதீப் பத்திரண)

புதுடெல்லி

ராகுலிடம் விசாரணை:

# அரசியல் சாசனத்துக்கு எதிரானது

## காங்கிரஸ் கண்டனம்

‘நேஷனல் ஹெரால்ட்’ வழக்கில் ராகுல்காந்தியிடம் அமலாக்கத்துறை விசாரணை நடத்துவதற்கு காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக காங்கிரஸ் பொதுச்செயலாளரும், தலைமை செய்தி தொடர்பாளருமான ரன்தீப் சுர்ஜீ வாலா கூறியதாவது:

ராகுல் காந்தியிடம் அமலாக்கத்துறை விசாரணை நடத்துவது, அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமானதாகும். அரசியல் பழிவாங்கும் முயற்சியில் பிரதமர் ஈடுபடுகிறார். ராகுல் காந்தியின் அரசியலை பார்த்து மத்திய அரசு பயப்படுகிறது. அவர் பொதுமக்களின் பிரச்சினையை எழுப்புவதால் அதை தடுக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது என்று அவர் கூறினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் கூறியதாவது: சட்டத்தை அமலாக்கத்துறை பின்பற்றினால் எங்களுக்கு பிரச்சினை இல்லை. ஆனால் அவர்கள் அதை பின்பற்றுவது இல்லை. அமலாக்கத்துறை சட்டத்தை தவறாக பயன்படுத்துவதை எதிர்த்து நாங்கள் போராடுகிறோம். என்ன குற்றம் நடந்தது எனக் கேட்கிறோம். பதில் இல்லை. முதல் தகவல் அறிக்கையின் நகல் கூடஇல்லை என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ராகுல்காந்தியிடம் விசாரணை நடக்கும் போதெல்லாம் காங்கிரஸார் நாடு முழுவதும் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளார்கள். பா.ஜ.க அரசாங்கத்தின் அமலாக்கத்துறையின் பழிவாங்கும் போக்கை கண்டித்து தொடர்ந்து போராடப்போவதாக அறிவித்துள்ளனர்.

பெங்களூர்

# மனைவிக்கு முதுகுவலி; கணவனுக்கு இழப்பீடு

மனைவிக்கு ஏற்பட்ட முதுகுவலியால், கணவனுக்கு 20 ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ள சம்பவமொன்று பெங்களூரில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: பெங்களூர், பலகெரேயை சேர்ந்த ஒருவர், ஒயிட்பீல்ட் பகுதியிலுள்ள எலெக்ட்ரோனிக் கடையில், 2011ஆம் ஆண்டு ஒரு சலவை இயந்திரத்தை கொள்வனவு செய்திருந்தார்.

சலவை இயந்திரத்தை கொள்வனவு செய்துபோதே, அதன் விலையிலிருந்து அதிகப்படியாக ஐயாயிரம் ரூபாய் செலுத்தி, மேலதிகமாக 2 ஆண்டுக்கு உத்தரவாதத்தை (வொரண்டி) கூடுதலாக பெற்றிருந்தார்.

இந்நிலையில், உத்தரவாத காலம் இருக்கும் போதே, சலவை இயந்திரம் பழுதானது. இதையடுத்து, அதைப் பழுது பார்த்து கொடுக்கும்படி சம்பந்தப்பட்ட எலெக்ட்ரோனிக் நிறுவனத்திடம் கோரியிருந்தார்.

சலவை இயந்திரத்தை பழுது பார்ப்பதற்காக நபர் வந்து, அதனை புகைப்படம் மட்டுமே எடுத்துச் சென்றதாகத் தெரிகிறது. உத்தரவாத காலம் இருந்தும், சலவை இயந்திரத்தை திருத்துவதற்கு, எலெக்ட்ரோனிக் நிறுவனத்திடம் இருந்து யாரும் வரவில்லை.

இதையடுத்து, பெங்களூரில் உள்ள நுகர்வோர் நீதிமன்றத்தில் அந்த நபர் எலக்ட்ரோனிக் நிறுவனம் மீது வழக்கு தொடர்ந்தார். அதில், ‘சலவை இயந்திரம் பழுதானதால், எனது மனைவி துணிகளை தொடர்ந்து தனது கையால் துவைத்ததால், முதுகுவலி உண்டானது. இதற்கு சிகிச்சை பெற்றதற்காக ரூபாய் இரண்டு இலட்சம் உட்பட, ரூபாய் மூன்று இலட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்’ என்று அந்த நபர் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இவ்வழக்கில், உத்தரவாத காலம் இருந்தும் சலவை இயந்திரத்தை திருத்தாததால், அந்த நபருக்கு ரூ.20 ஆயிரம் இழப்பீடு வழங்கும்படி எலெக்ட்ரோனிக் நிறுவனத்துக்கு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சென்னை

# வியாபாரம் வேறு; கடமை வேறு

சென்னையில், மக்கள் நீதி மய்யம் சார்பில், ‘ஒருங்கிணைந்த இரத்த தான குழு’வை, கமலஹாசன் நேற்றுமுன்தினம் தொடக்கி வைத்து உரையாற்றும் போது அவர் கூறியிருந்ததாவது:

சிறையில் இருந்தால் தான் தலைவர் என்பதில்லை; திரையில் இருந்தாலும் தலைவர் தான். காந்தியை சினிமாவில் தான் பலர் பார்த்துள்ளனர். தண்டி யாத்திரை போன்ற பல நிகழ்வுகளையும் சினிமாவில் தான் பார்த்துள்ளோம். சினிமா என்பது, எனக்கு கிடைத்த ஒரு படிக்கட்டு; ஏற வேண்டிய மலை இன்னும் நிறைய இருக்கிறது. 40 ஆண்டுகளாக அந்த மலையில் ஏறிக் கொண்டு தான் இருக்கிறேன்.

இரத்த தான முகாம் ஆரம்பித்ததற்கு காரணம், இரத்தத்தை பணமாக மாற்றும் மருத்துவமனைகள் மாற வேண்டும் என்பதற்காக தான். வியாபாரம் எது, கடமை எது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அரசியல் வியாபாரம் அல்ல; ஆனால், அரசியலை வியாபாரமாக தான் செய்கின்றனர். நான் அவ்வாறு இருக்க மாட்டேன். ஏனெனில், அது நீரோடை அல்ல; சாக்கடை. நான் அதில் கலக்க மாட்டேன். அதை சுத்தம் செய்வதும், இல்லாமல் ஆக்குவதுமே நம் வேலை என்று கமலஹாசன் பேசினார்.

சேலம்

10ஆம் வகுப்பு பொதுப் பரீட்சையில்

# விடைத்தாளில் எதுவும் எழுதாத மாணவர்கள்

## கொரோனா செய்த கோலம்

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில், பல மாணவர்கள் விடைத்தாள்களில் எதுவுமே எழுதாததால், விடைத்தாள்களைத் திருத்திய ஆசிரியர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பாடசாலைகள் முறையாக இயங்கவில்லை. பத்தாம் வகுப்பு தேர்வெழுதிய மாணவர்களுக்கு, 9, 10ஆம் வகுப்புகளில் மொத்தம், மூன்று மாதம் கூட பாடம் நடத்தவில்லை. அந்த மூன்று மாத வகுப்புகளுக்கும் பல மாணவர்கள் வரவில்லை. இந்நிலையில், மே மாதம், பத்தாம் வகுப்பு பொதுப் பரீட்சை நடத்தப்பட்டது.இதுகுறித்து ஆசிரியர்கள் கூறியதாவது:

விடைத்தாள் திருத்தும் போது, ஒற்றை இலக்கத்தில் மதிப்பெண் வந்தால், மேல் அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. வினாக்களை எழுதி வைத்திருந்தால் கூட, அதற்கு மதிப்பெண் வழங்கப்பட்டது. ஆனால், பல மாணவர்கள் விடைத்தாளில் எதுவுமே எழுதாமல் வழங்கியிருந்தனர். இவர்களுக்கு பூஜ்யம் மதிப்பெண் வழங்க முடியாமல், இணை இயக்குநர் வரை பார்வைக்கு கொண்டு சென்று, ஆசிரியர்கள் விளக்கம் எழுதிக் கொடுக்க நேர்ந்தது. தாராளமாக புள்ளிகள் வழங்கியும் கூட, 40 சதவீத மாணவர்களை தேர்ச்சி பெற செய்வது கூட சிக்கலாக இருந்தது எனக் கூறினர்.

தர்மபுரி

# தேர் கவிழ்ந்து விபத்து;

## பக்தர் இருவர் பலி; மூவர் படுகாயம்

தர்மகுரி, பாப்பாரப்பட்டி அருகே, கோவில் திருவிழாவில் தேர் கவிழ்ந்ததில் பக்தர்கள் இருவர் இறந்தனர். மாதேஹள்ளியில், 18 கிராமங்களுக்கு சொந்தமான காளியம்மன் கோவில் உள்ளது. இக்கோவில் திருவிழா, நேற்று முன்தினம் (13) மாலை, 4 மணிக்கு தேரோட்டம் தொடங்கியது. இதில், ஏராளமான பக்தர்கள் பங்கேற்று வடம் பிடித்தனர்.

கோவிலை சுற்றி தேர் வந்தபோது, மாலை, 6:50 மணிக்கு தேரின் பின் சக்கரத்தின் அச்சாணி முறிந்தது. இதையறியாத பக்தர்கள், தேரை இழுத்த போது, பள்ளத்தில் சக்கரம் சிக்கி, முன்புறமாக தேர் கவிழ்ந்தது. தேர் பீடம் பகுதியில், 10க்கும் மேற்பட்டோர் சிக்கினர்.

அவர்களில் ஐந்து பேர் படுகாயமடைந்தனர். அவர்களை பக்தர்கள் மற்றும் பொலிஸார் மீட்டு, மருத்துவமனைக்கு அனுப்பினர். அங்கு 56, 60 வயதுடைய இருவர் இறந்தனர். மூன்று பேர் சிகிச்சை பெறுகின்றனர்.

திருத்தொண்டர் சபை நிறுவனர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது: திருவிழாவின் போது, தேர் நல்ல நிலையில் உள்ளதா என்பதை ஒவ்வொரு நிலை அலுவலரும் கண்காணிக்க வேண்டும் என அரசாணை உள்ளது.

இந்தத் தேர் பழுதாகி உள்ளது; அதை புதுப்பிக்க வேண்டும் என பலமுறை மனு அளித்துள்ளேன். அனைத்து துறை செயலர்கள் முதல், கலெக்டர் வரை அனைவரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளேன். கடந்த வாரம், தேரை நேரில் பார்வையிட்டு, அதை பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக மீண்டும் முறையிட்டேன். எவரும் கண்டுகொள்ளவில்லை. அதிகாரிகள் அலட்சியம் பல உயிர்களை பலி கொண்டுள்ளது என்று அவர் கூறினார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது ODI போட்டியில்

# 300 ஓட்டங்களைக் குவித்த இலங்கை

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் (ODI), முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், பல்லேகலவில் நேற்று இடம்பெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

இலங்கை சார்பாக பந்துவீச்சாளர் டுனித் வெல்லலாகே அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, தனுஷ்க குணதிலகவின் 55 (53), பதும் நிஸங்கவின் 56 (68) ஓட்டங்களோடு சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றது. பின்னர் குணதிலகவின் ரண் அவுட்டைத் தொடர்ந்து நிஸங்கவும் அஸ்தன் அகரிடம் வீழ்ந்ததோடு, தனஞ்சய டி சில்வாவும் சிறிது நேரத்தில் அகரிடம் வீழ்ந்தார்.

தொடர்ந்து குசல் மென்டிஸும், சரித் அஸலங்கவும் இனிங்ஸை நகர்த்திய நிலையில் 37 ஓட்டங்களுடன் ஜஹை றிச்சர்ட்ஸனிடம் அஸலங்க வீழ்ந்தார். அடுத்து வந்த ஷானக, சாமிக கருணாரத்ன ஆகியோர் உடனேயே மர்னுஸ் லபுஷைனிடம் வீழ்ந்தனர்.

இந்நிலையில், மென்டிஸின் ஆட்டமிழக்காத 86 (87), வனிடு ஹஸரங்கவின் அதிரடியான 37 (19) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது.

வல்வை வி.க தொடர்:

# இறுதிப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ்

வல்வை விளையாட்டுக் கழகம், தனது வைர விழாவை முன்னிட்டும் மறைந்த வீரர்கள் ஞாபகார்த்தமாகவும் நடாத்தும் 9 நபர் கொண்ட மாபெரும் வட மாகாண ரீதியிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வலைப்பாடு ஜெகமீட்பர் அணியுடனான அரையிறுதிப் போட்டியில் வென்றே இறுதிப் போட்டிக்கு றேஞ்சஸ் தகுதி பெற்றிருந்தது.

போட்டியின் வழமையான நேரத்தில் 1-1 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்த நிலையில், பெனால்டியில் 7-6 என்ற ரீதியில் வென்றே இறுதிப் போட்டிக்கு றேஞ்சஸ் தகுதி பெற்றிருந்தது.

தேசங்களுக்கான லீக் தொடர்:

# நடப்புச் சம்பியனை வென்ற குரோஷியா

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில், தமது நாட்டில் நேற்று அதிகாலை நடைபெற்ற குரோஷியாவுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பிரான்ஸ் தோற்றது.

குரோஷியா சார்பாகப் பெறப்பட்ட கோலை லூகா மோட்ரிச் பெற்றிருந்தார்.

அந்தவகையில், இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்பை பிரான்ஸ் இழந்துள்ளது.

# சம்பியனான காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி

சகா

கல்முனை வலய மட்டத்துக்குகு இடையிலான 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சம்பியனாகியுள்ளது.

அமெரிக்கா

# சிறுமியை கொன்ற பேன்

## தாய், பாட்டி மீது கொலை வழக்கு.

அமெரிக்காவில் பேன் தொல்லையால் சிறுமி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில், அரிசோனா மாகாணத்தில் டுக்சன் என்னும் பகுதியில் வசித்து வந்த 9 வயதான சிறுமியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி இரத்த சோகை நோய் மற்றும் கடுமையான பேன் தொல்லையால் அவதிப்பட்டிருந்தார். இதனால் அவரது தலையில் காயங்கள் பல காணப்பட்டதாகவும் அக்காயத்தின் மூலமாக தலை மற்றும் முகத்தில் கிருமித்தொற்று ஏற்பட்டுள்ளதோடு, இரத்த வாந்தி, கடுமையான வயிற்றுப்போக்காலும் அவர் அவதிப்பட்டு வந்துள்ளார்.

எனினும், அச்சிறுமியின் பாட்டியும் அம்மாவும் அவரை சிகிச்சைக்கு அழைத்துச் செல்லவில்லை.

இந்நிலையில், நாளடையில் அச்சிறுமியின் உடல் மேலும் மோசமடைந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், அச் சிறுமியின் பாட்டியும் அம்மாவும் சிறுமியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமையே அவர் உயிரிழந்துள்ளமைக்குக் காரணமெனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இருவரையும் கைது செய்துள்ள பொலிஸார், அவர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சரிவடைந்த பிட்கொயின் மதிப்பு

கடந்த ஒன்றரை வருடங்களில் இல்லாத வகையில் 'பிட்கொயின்' மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் 'கிரிப்டோகரன்சி' எனப்படும் பிட்கொயின் நாணயம் அதிக அளவில் பிரபலமானது.

கைகளால் பரிமாற்றம் செய்ய முடியாத இந்நாணயமானது, டிஜிட்டல் முறையில் பரிமாற்றம் செய்யப்படுகிறது. இதன் காரணமாக உலகம் முழுக்க பலரும் கிரிப்டோகரன்சியில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், தற்போது ஒன்றரை வருடங்களில் இல்லாத வகையில் பிட்கொயின் மதிப்பு சரிவடைந்துள்ளது.

இது பிட்கொயின் முதலீட்டாளர்கள் மத்தியில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்து

# எலிப்படை

பூகம்பம், நிலச்சரிவு போன்ற இயற்கை சீற்றங்களின் போது இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களைக் கண்டுபிடிக்க உதவும் வகையில் எலிப்படை ஒன்றை அமைக்கும் பணியில் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் ஈடுபட்டு வருகின்றார்.

இதற்காக 7 எலிகள் கொண்ட படை ஒன்றை அமைத்துள்ள அவர், அவற்றுக்கு தீவிர பயிற்சிகளை அளித்து வருவதாகவும், குறிப்பாக இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை கண்டுபிடித்தால் 'பீப்' ஒலி எழுப்பும் பயிற்சியை அளித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எலிகளுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பிரத்தியேக ஆடையில் ஒலிப்பதிவு செய்யும் மைக்ரோ ஃபோனும், இடத்தை அடையாளம் காட்டும் லொகேஷன் டிராக்கர் கருவியும் பொருத்தி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பர்கினா பாசோ

# பர்கினா பாசோவில் கொடூரம்

## 100க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

மேற்கு ஆபிரிக்க நாடான பர்கின பாசோவில் புலம்பெயர் மக்கள் வாழும் கிராமத்தில் பயங்கரவாதக் குழுவொன்று நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் 100 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

நைஜருக்கு அருகே உள்ள கிராமத்திலேயே 11 ஆம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இத்தாக்குதலில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 100 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்கா

# கிறிஸ்டியானோ மீதான பாலியல் வழக்கு

பிரபல காற்பந்து வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு எதிராக 2009 ஆம் ஆண்டு கேத்ரின் மயோர்கா என்ற பெண், அமெரிக்க நீதிமன்றத்தில் பாலியல் வழக்கொன்றைத் தொடர்ந்திருந்தார்.

அதில் 'லாஸ் வேகாஸில் உள்ளபோது கிறிஸ்டியானோ தன்னைப் பாலியல் வன்கொடுமை செய்ததாகக் குற்றம் சாட்டியிருந்தார். அத்துடன் இதற்கு இழப்பீடாக ரொனால்டோ 3,75,000 டொலர் தரவேண்டும் எனவும் நீதிமன்றத்தில் முறையிட்டு இருந்தார்.



இவ் வழக்கு விசாரணையின்போது, ரொனால்டோவின் சட்டத்தரணிகள், "புகார் அளித்த பெண்ணும், கிறிஸ்டியானோவும் பரஸ்பர சம்மதத்துடனேயே பாலியல்உறவு வைத்துக்கொண்டனர். இதைப் பாலியல் பலாத்காரமாக எடுத்துக்கொள்ள முடியாது. இரகசியத் தன்மை ஒப்பந்தம் இருவருக்கும் இருந்தது" எனவும் வாதிட்டனர்.

இவ்வாதத்திற்கு சம்பந்தப்பட்ட பெண்ணின் சட்டத்தரணிகள் உரிய பதிலை அளிக்காததால், வழக்கைத் தள்ளுபடி செய்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வத்திகான்

# முழங்கால் வலியால் போப் அவதி

85 வயதான போப் ஆண்டவர் பிரான்சிஸ், அண்மைக்காலமாக வலது முழங்கால் வலியால் அவதிப்பட்டு வருகின்றார்.

இதன் காரணமாக அவரை, சக்கர கதிரையைப் பயன்படுத்துமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதையடுத்து போப் ஆண்டவர், சக்கர கதிரையைப் பயன்படுத்தியே ஒருசில நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகின்றார். எனினும் வார இறுதியில் நடைபெறவுள்ள ஆராதனை நிகழ்வில் அவர் கலந்து கொள்ள மாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 15 ஜூன் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.